ந.க.எண்:நாள்: 3956 /2023/அ1 நாள்:07..12.2023

**ஊரகவளர்ச்சிமற்றும் ஊராட்சித் துறை**
**திருப்பூர்ஊராட்சிஒன்றியம்,**
**திருப்பூர் மாவட்டம்**

**அலுவலகஉதவியாளர் பதவிக்கானஅறிவிக்கை (Notification)**

திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஒன்றிய தலைப்பில் ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தினை நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 12.12.2023 முதல். 26.12.2023 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | : | அலுவலக உதவியாளர் |
| 2. | சம்பளம் | : | ரூ.15700-50000 (Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் இதரபடிகளுடன் |
| 3. | வயது | : | 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.<br>அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தி அடையாமல் இருக்கவேண்டும். (01.07.2023 அன்றுஉள்ளவாறு) |
| 4. | வகுப்பு | | |
| | **பொதுப்பிரிவு (OC)** | | |
| | • அரசாணைநிலை எண்.91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை,நாள்:19.09.2021ன்படி (உச்ச வயது வரம்பு 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது) பொது (OC) பிரிவினர் 18 வயது நிரம்பியவராகவும் 32 வயதுக்கு மிகையாகாமல் இருக்கவேண்டும். | | |
| | **BC / MBC / DC பிரிவினர்** | | |
| | • அரசாணை நிலை எண்.91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை,நாள்:19.09.2021-ன்படி (உச்சவயதுவரம்பு 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது) BC / MBC / DCபிரிவினர் 18 வயது நிரம்பியவராகவும் 34வயதுக்கு மிகையாகாமல் இருக்கவேண்டும். | | |
| | **SC / ST / SCA பிரிவினர்** | | |
| | • அரசாணை நிலை எண்.91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்:19.09.2021-ன்படி (உச்சவயதுவரம்பு 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது) SC | | |

| | | | |
|---|---|---|---|
| | / ST / SCAபிரிவினர் 18 வயது நிரம்பியவராகவும் 37 வயதுக்கு மிகையாகாமல் இருக்கவேண்டும். | | |
| 5. | மொத்த பணியிடங்கள் | : | 1 எண்ணிக்கை |
| 6. | இனச்சுழற்சிஎண் மற்றும் இட ஒதுக்கீடு விவரங்கள் | 2 | Scheduled Castes (Arunthathiyars on preferential basis) (Women / Destituted widow) |
| 7. | கல்வி தகுதி மற்றும் பிற தகுதிகள் | : | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.<br>மிதி வண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்கவேண்டும். |
| 8. | விண்ணப்பபடிவம் | | இப்பணியிடத்திற்கானவிண்ணப் படிவத்தினைhttps://tiruppur.nic.in என்றஇணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். |
| 9. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள் | : | 26.12.2023பிற்பகல் 5.45 மணிவரை |

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை https://tiruppur.nic.in இணைய தளத்திலும் தேசிய தொழில் நெறிவழிகாட்டு மைய இணையதளத்திலும் (National career service portal) www.ncs.gov.in உள்ள விண்ணப்பபடிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து 12.12.2023 முதல் 26.12.2023 வரைஅலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.45 மணி வரை **ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருப்பூர்** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தில் உள்ள விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத (கல்வி,வயது, இனச்சுழற்சி) விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. அரசுவிதிகளின்படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
5. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) பின்னர் அனுப்பிவைக்கப்படும்.
6. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.
8. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்குஉண்டு.

07/12/2023

ஆணையாளர்,
ஊராட்சிஒன்றியம்,திருப்பூர்.

07/12/23